1968 மார்ச் 4]

THIRU A. CHIDAMBARANATHA NADAR : Sir, is there any possibility of widening this bridge at least in the near future ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போதுள்ள பாலத்தை 14 அடி அகலத்திலிருந்து 24 அடி அகலம் உள்ள பாலமாக விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இதற்கு சுமார் 80 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகச் செய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம் பணத்தட்டுப்பாடே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கொளச்சல் ஒரு முக்கிய சிறிய துறைமுகம். ஆகவே, இந்தப் பாலம் அவசியமானது என்ற அளவிலே விரிவுபடுத்த, இந்தத் திட்டத்தை அடுத்த திட்டத்தி லாவது எடுத்துக்கொள்ள அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பாலத்தை இப்போது விரிவுபடுத்து வதாக இல்லை. பாலத்தை விரிவுபடுத்துவதில் இந்த அரசாங்கத்திற்கு அதிக அக்கறை இருக்கிறது. நிதிநிலையை அடிப்படையாக வைத்து இது யோசிக்கப்படும்.

*132 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

மேலூர் வட்டம், சொக்கலிங்கபுரத்திற்கும் பாண்டாங்குடிக்கும் இடையில் பாலாற்றின் மீது பாலம் கட்டுவதற்குரிய ஆய்வு வேலைகள் முடிந்தும், இன்னும் பாலங் கட்டுவதற்குரிய பணி தொடங்காததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சொக்கலிங்கபுரத்திற்கும் பாண்டாங் குடிக்கும் இடையில் பாலாற்றின் மீது தற்போது ஆற்றுப் படுகை மட்டத் திலேயே போட்டுள்ள ஊடு பாலத்திற்கு பதிலாக, முறையான பாலம் ஒன்றைக் கட்டுவது குறித்த செயற்குறிப்புகளை (நெடுஞ்சாலை-கிராமப்பணிகள்) தலைமைப் பொறியாளர் அனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்புகள் அரசாங்கத்தால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are some fortunate rivers in our State over which a number of bridges have been constructed during the past one century. At the same time there are a number of other rivers over which not a single bridge has been constructed so far. Therefore, will the Hon. Minister for Public Works be pleased to pay his attention to those rivers over which bridges have not been constructed yet ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி உரிய நேரத்தில் முறை யாக கவனிக்கப்படும்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, மதுரை-காரைக்குடிக்கும் திண்டுக்கல்-காரைக்குடிக்கும் மத்தியிலுள்ள சொக்கலிங்கபுரத்தில் ஏரா ளமாக முஸ்லீம்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் காங்கிரஸுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக முன்பிருந்த அர சாங்கம் வேண்டுமென்றே இந்தத் திட்டத்தைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்ததா?

திரு. கே. விநயகம் : ஆன் எ. பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார் ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு குறிப்பிட்ட இடத்திலே இருக்கின்ற முஸ்லீம்கள் காங்கிரசுக்கு விரோதமாக இருந்தார்கள் என்பதால் முன்பிருந்த அரசாங்கம் வேண்டுமென்றே இந்தத் திட்டத்தைப் புறக் கணித்தது என்று சொல்வது முறையாகாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிக் கேட்பது நியாயம் இல்லை யென்று சொன்னால், அங்கு வாழ்ந்துவந்த முஸ்லீம்கள் தி.மு.க. வுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்று கேள்வியை மாற்றிக் கொள்ளலாமா?

திரு. முனு ஆதி : சொக்கலிங்கபுரத்திலிருந்த முஸ்லீம்கள் தி.மு.க.வுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்ற காரணத்திற்காக முன்பிருந்த அரசாங்கம் பாலம் கட்டுவதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தது உண்மைதானா?

(திரு. கே. விநயகம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியில் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. ஆகவே, இந்த வினாவை அனுமதிக்க முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த வினா எண் 133. திரு வி. கே. கோதண்டராமன் கேட்ட வினாவிற்கு மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்கள்.

மேச்சேரி இன ஆடுகள்

*133 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி ஆடுகளை அபிவிருத்தி செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சபைமுன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, மேச்சேரி இன ஆடுகள் மிகவும் அதிகப்படியான இறைச்சியைக் கொடுக்குமென்பதால் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு நீண்ட பெருமுயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்று கூறியிருக்கிறீர்கள். அதே நேரத்தில் அதில் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் என்ன? ஆடுகள் அபிவிருத்தியடையவில்லையா? நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த வகை ஆடுகளைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மேலும் இந்த ஆடுகளுக்கு அம்மைநோய், நச்சுசிக்கட்டு வியாதி வந்த காரணத்தினால் அவைகளைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, வேறுவிதமான ஆடுகளை விட, மேச்சேரி இன ஆடுகளால் ஏற்படும் பொதுவான பயன் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விவர அறிக்கையில் முழு விவரங்களும் அடங்கியிருக்கின்றன. மேச்சேரி இன ஆடுகள் அதிக இறைச்சியைத் தருகின்றன.

திரு. ரா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நாங்குனேரி வட்டம், மூலக்கரைப்பட்டி ஆட்டுப்பண்ணையில் மேச்சேரி இன ஆடுகளை வைத்துப் பண்ணையை பராமரிக்க அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மேச்சேரி இன ஆடுகள் இந்தப் பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றன. சேலம் மாவட்டத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் உள்ள பண்ணைகளில் இந்த இன ஆடுகள் இருக்கின்றன. அங்கத்தினர் கூறுகிற பண்ணையில் இந்த இன ஆடுகள் வளர்க்க போதுமான சௌகரியம் இருக்குமானால் அதுபற்றி பரிசீலிக்கப் படும்.

THIRU B. VENKATASWAMY : Hon. Speaker, Sir, may I know from the Hon. Minister for Agriculture whether there is any proposal to introduce the Australian sheep in our State and if so, in which farms it is being introduced?

---

a 77–80-ம் பக்கங்களில் முதலாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.